(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 290]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2013 யூலை 23, செவ்வாய்க்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2443/ '12

1.

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) நில்வலா கங்கை திட்டத்தின் முதலாம் கட்டத்திற்குட்பட்ட கிரளகலே பிரதேசத்தின் ஈரநிலப் பிரதேசத்தில் எத்தனை ஹெக்டயார் காணி உள்ளதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நில்வலா கங்கை பெருக்கெடுப்பதை தடுப்பதற்கு கிரளகலே மற்றும் அதனை அண்டிய பிரதேசத்தில் எப்போதும் மழை நீர் இறைக்கப்பட்டு வருகின்றதென்பதையும்;

(ii) இந் நிலைமையின் காரணமாக இப்பிரதேசங்களில் நிலக்கீழ் நீர் குறைவடைந்து மண்படைகளுக்குள்ளே உவர் நீர்க் கசிவு ஏற்படுகின்றது என்பதையும்;

(iii) இதனால் ஏற்படுகின்ற சுற்றாடல் நிலைமைகளின் காரணமாக கிரளகலேயின் ஈரநிலம் சார்ந்த வயல்கள் செய்கைபண்ணப்படாது விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(இ) மேற்படி (ஆ) (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள சிக்கலான நிலையை மாற்றியமைப் பதற்காக கத்தூவ நீர் பம்பி நிலையத்திற்கு கீழே அணைக் கட்டொன்றை அமைத்து கிரளகலே பிரதேசத்திற்கு நீர் வழங்குவதற்கான திட்டமேதும் உள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2584/ '12

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் மின்சார வசதியற்ற கிராமங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவையென்பதையும்

மாவட்ட மட்டத்தில் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிடப்பட்ட மின்சார வசதியற்ற கிராமங்களுக்கு எக்காலப்பகுதியில் மின்சார வசதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் மின்சார வசதியற்ற அனைத்து கிராமங்களுக்கும் மின்சார வசதியினை பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை இருந்ததா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2875/ '12

3\.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கை இராணுவப் படையினரின் உணவுக்காக மாமிச வகைகளை வழங்கிய வழங்குநர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இராணுவப் படைக்கான மாமிசம் வழங்குநர்கள் தெரிவு செய்யப்படும் விதம் யாது என்பதையும்;

(iii) மேற்படி பகுதியினுள் ஒவ்வொரு மாமிச வகைக்காகவும் வருடாந்தம் செலுத்தப்பட்ட மொத்தப் பணத்தொகை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) இதற்காக மேலும் செலுத்தப்பட வேண்டியுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(v) மேற்குறிப்பிடப்பட்ட மாமிச வகைகளில் ஒரு கிலோவுக்காக வருடாந்தம் செலுத்தப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாது என்பதையும்;

(vi) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு மாமிச வகையினதும் வருடாந்த தேவைப்பாடு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2890/ '12

4\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உலகளாவிய ரீதியில் இலங்கையைப் பிரதிநிதிப்படுத்துகின்ற வேதனம் பெறாத கௌரவ கொன்சலர்களின் எண்ணிக்கையையும்;

(ii) அவர்களின் பெயர்களை அவர்கள் பிரதிநிதிப்படுத்துகின்ற நாடுகளுடனும்;

(iii) அவர்கள் அவ்வாறு செய்துவருகின்ற காலத்தையும்;

(iv) அவர்களின் நியமனங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப்பிரமாணங்களையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) 1948 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இலங்கையால் நியமிக்கப்பட்ட கௌரவ கொன்சலர் எவரேனும் நீக்கப்பட்டனராவென்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய கொன்சலர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2999/ '12

5\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மேல் மாகாணத்தில் 2012 ஆம் ஆண்டின் முடிவில் அறியக்கிடைத்துள்ள,

(i) ஒட்டுமொத்த தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தலசீமியா நோயாளர்களின் மத்தியிலுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலை மாணவர்களில் 15 வயதுக்குக் குறைந்த தலசீமியா நோய்க்குள்ளான பிள்ளைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) 15 வயதுக்கு மேற்பட்ட தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தலசீமியா நோயானது வட மேல் மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களுக்குப் பரவியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அறியக்கிடைத்துள்ள ஒட்டுமொத்த தலசீமியா நோளார்களின் எண்ணிக்கை மாகாண வாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) தலசீமியா நோயாளர்களுக்காக விசேட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(v) தலசீமியா நோயை இல்லாதொழிப்பதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3254/ '12

6.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அண்மையில் மடிக் கணினிகள் வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஊடகவியலாளர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மடிக் கணனிகளை வழங்குவதற்காக ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி கணனியொன்றின் விலை எவ்வளவு என்பதையும்;

(v) இற்றைவரை வழங்கப்பட்டுள்ள மடிக் கணனிகளுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3597/ '13

7.

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தொழிலற்ற ஆயுர்வேத பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இறுதியாக ஆயுர்வேத பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iii) அச்சந்தர்ப்பத்தில் நியமனங்கள் வழங்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரியொருவரை உருவாக்குவதற்காக அரசாங்கம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஆயுர்வேத மருத்துவர்களது பற்றாக்குறையின் காரணமாக மூடப்பட்டுள்ள மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி மருந்தகங்களுக்கு ஆயுர்வேத மருத்துவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3632/ '13

8.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் கல்விக் கோட்டத்துக்குரிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

(ii) இதன் காரணமாக மாணவர்களின் கல்வி மட்டம் வீழ்ச்சியடைவதாக பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் கல்வித் துறையினரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதுடன் இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையில் கலந்துரையாடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மாணவர்களின் எதிர்கால கல்வி நலனைக் கருத்தில் கொண்டு அப் பிரதேசத்தில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குயை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3634/ '13

9.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக எண்ணெய்த் தாங்கி பண்ணை நிர்மாணம் தொடர்பாக,

(i) கருத்திட்டத்தின் இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம்;

(ii) கருத்திட்டச் செலவினம் எவ்வாறு நிதியிடப்பட்டது;

(iii) கடன் வசதிகளுக்கான நியதிகள், ஏதும் இருப்பின்;

(iv) நிதிக் கிரயம் மற்றும் கடன் வட்டி ஆகியவற்றின் கொடுப்பனவு இடம்பெற்றதன் பின்னர் கருத்திட்டம் எப்போது காசோட்ட இலாப நட்டமற்ற நிலையை அடையும்;

(v) ஒவ்வொரு தாங்கியினதும் கொள்ளளவு;

(vi) தாங்கிகள் ஒவ்வொன்றும் பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள் அல்லது அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதிகள்

ஆகியவற்றை அவர் கூறுவாரா?

(ஆ) (i) எதிர்பார்க்கப்படும் காப்பறை எரிபொருள் (bunker fuel) விமான எரிபொருள் (aero fuel) மற்றும் எல். பி. ஜி. (LPG) ஆகிவற்றை ஏற்றிவரும் எண்ணெய்க் கப்பல்களை விடுவிக்க தேவைப்படும் தாங்கிகளின் எண்ணிக்கை;

(ii) இற்றை வரையில் துறைமுகத்திற்கு வந்துள்ள மேலே குறிப்பிடப்பட்ட எரிபொருள் வகைகளை விடுவித்துள்ள கப்பல்களின் எண்ணிக்கையையும்;

(iii) மூல கருத்திட்டத்திற்கிணங்க வருடமொன்றுக்கு துறைமுகத்திற்கு வருவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணெய்க் கப்பல்களின் எண்ணிக்கையையும் மாதமொன்றுக்கு மேற்படி எரிபொருள் வகைகளை விடுவிக்க தேவையான தாங்கிகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3646/ '13

10.

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் இலங்கை வங்கியால் பங்குகளில் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையையும்;

(ii) 2011 ஆம் ஆண்டில் 'பர்பசுவல் கெப்பிட்டல் அன்ட் லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி சிக்குரிட்டீஸ் (Perpetual Capital and Lanka Orix Leasing Securities) உடன் இலங்கை வங்கி செய்துள்ள வணிகத்தின் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2011 ஆம் ஆண்டில் இலங்கை வங்கி கொள்முதல் செய்துள்ள அனைத்து பங்குகளின் பட்டியலொன்றை கொள்முதலுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னரான கொள்முதல் விலை மற்றும் பங்குகளின் சராசரி நிறையளித்த விலை ஆகியவற்றுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3657/ '13

11.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தில், உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான கட்டுதெனிய, வாரியபொல கிராமங்களுக்குச் செல்லும் பாதை, A- 9 வீதியுடன் இணைக்கப்படும் இடத்தில் காணப்பட்ட சிறிய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் தற்போது குறித்த நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(ii) மதிப்பீடுகளின்படி புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பணிகளை நிறைவுசெய்ய உத்தேசமாயிருந்த திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாலத்தின் நிர்மாணப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிர்மாணிப்புக்கென செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குறித்த பாலத்தை நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2585/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாச,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச புள்ளிவிபரங்களுக்கமைய இலங்கையில் ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு சீவிப்பதற்கு தேவைப்படும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு உணவுத் தேவைக்கான செலவு மற்றும் உணவு அல்லாத தேவைகளுக்கான செலவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

(iii) ஒரு குடும்பத்துக்கு சீவிப்பதற்கு மாதாந்தம் தேவைப்படும் பணத் தொகை ஒவ்வொரு மாவட்டங்களுக்கமைய வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதமொன்றுக்கு சீவிப்பதற்கு ரூபா 7500.00 போதுமானதென்பதை அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(இ) இன்றேல், ஏன்?

2710/ '12

13.

கௌரவ புத்திக பதிரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் வரையறுக்கப்பட்ட களுபோவிட்யன தேயிலை தொழிற்சாலைக்குரிய சீ.ரீ.சீ. தேயிலைத் தொழிற்சாலையிலிருந்து 2012.01.26 ஆந் திகதி தேயிலை நிரப்பிய 240 பைகள் கொழும்புக்கு ஏற்றிச் செல்வதற்காக SP KL-5432 ஆம் இலக்க லொறியில் ஏற்றப்பட்டுள்ள தென்பதையும்;

(ii) அந்தத் தேயிலைப் பைகள் ஏற்றபட்டதாக தொழிற்சாலையின் அத்தியட்சகர் மற்றும் லொறி சாரதி தேயிலை விநியோக ஏட்டில் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்பதையும்;

(iii) இந்த 240 தேயிலை பைகளில் 200 தேயிலை பைகள் மாத்திரமே கொள்வனவு செய்யும் இடத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளனதென்பதையும்;

(iv) தொழிற்சாலை ஆவணங்களில் 240 எனக் குறிப்பிடப்பட்டிருந்த தேயிலை பைகளின் எண்ணிக்கை பின்னர் 200 ஆக மாற்றப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) களுபோவிட்டியன சீ.ரீ.சீ. தேயிலை தொழிற்சாலையில் இடம்பெற்றுள்ள மேற்கூறிய மோசடி தொடர்பாக முறையான விசாரணை நடத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் ;

(ii) அவ்வாறெனின் அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

14.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள படையினருக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவை என்பதையும்;

(ii) இவர்களது சம்பளத்திலிருந்து மாதாந்தம் அறவிடப்படும் அறவீடுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அறவீடுகள் நிதியமொன்றில் வைப்பிலிடப்படுகின்றனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நிதியம் எந்த நிறுவனத்தின் கணக்குகளில் இடப்பட்டுள்ளன என்பதையும்;

(v) இவ்வாறான அறவீடுகளை மேற்கொள்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) அவர்களுக்கு மீளச் செலுத்தப்படும் அறவீடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிவில் பாதுகாப்பு படையினரின் சம்பளம் உரிய திகதியில் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இல்லையெனில், அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைப் பணத்தொகை யாது என்பதையும்;

(iii) மேற்படி நிலுவைச் சம்பளம் வழங்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சிவில் பாதுகாப்பு படையினரை ஈடுபடுத்தி தற்போது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் யாவை என்பதையும்;

(ii) பயிர்ச் செய்கை மற்றும் ஏனைய கைத்தொழில்களில் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) மேற்படி நடவடிக்கைக்காக அவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளினூடாக அவர்கள் வருடாந்தம் ஈட்டிக் கொடுக்கும் பணத்தொகை யாது என்பதையும்;

(v) மேற்படி பணத்தொகை எந்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2891/ '12

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டுக்கு கிடைக்கின்ற சகல வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் மானியங்களை பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் பொறுப்பாக உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், கடந்த 3 வருடங்களின் போது மேற்படி திணைக்களத்தின் ஊடாக நாட்டினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) கடந்த 5 வருடங்களில் வாக்களிக்கப்பட்டதும் பெற்றுக்கொள்ளப்பட்டதுமான பணத்தொகை நாடுகளின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேலே (ii) இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தின் பயன்பாட்டு வீதத்தை ஆண்டு அடிப்படையில் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கடந்த 10 வருடங்களாக, வெளிநாடுகளிலிருந்து அல்லது பல்தரப்பு முகவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த பணத்தொகை தொடர்பாக, ஆண்டு அடிப்படையில்,

(i) பயன்படுத்தப்படாத தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட பணத்தை பயன்படுத்த முடியாமைக்கான காரணங்கள் என்ன என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.1),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"ஸெய்யித் அப்துர் ரஹ்மான் ஜிப்ரி மௌலானா ஞாபகார்த்த அறக்கட்டளையைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

2.

கௌரவ ஹுனைஸ் பாறூக்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல.2),— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"அல்ஹசன் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2013 சனவரி 22 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2013.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 3.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2012 திசெம்பர் 08 ஆம் திகதிய 1787/41 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 4.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 பெப்புருவரி 08 ஆம் திகதிய 1796/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் முத்திரை வரி தொடர்பில் சனாதிபதியினால் விதிக்கப்பட்டு, 2013 மே மாதம் 10 ஆந் திகதிய 1809/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் கீழ் மதுவரி தொடர்பில் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் விதிக்கப்பட்டு 2013 ஏப்பிறல் மாதம் 03 ஆம் திகதிய 1804/16 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.11 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இல. 957)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மே 03 ஆம் திகதிய 1808/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 8.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 யூன் 07 ஆம் திகதிய 1813/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் 10ஆம் பிரிவின் கீழான இறக்குமதித் தீர்வைகள் சம்பந்தமான, 2012.07.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2013 யூன் மாதம் 20 ஆம் திகதிய 1815/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடனும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) உப பிரிவுடனும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு, 2013 மாச்சு 01 ஆம் திகதிய 1799/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 13.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 14.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 15.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (செத்தெம்பர் 08, 2011) ,— "2007 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நீதி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2011 மே 30 ஆம் திகதிய 1708/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டதும், 2011.08.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 17.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

18.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

அரச ஊழியர் அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

20.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை

22.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.